முருகப்பெருமான் துணை

**மகான் காசிபர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.10.2022, வெள்ளிக்கிழமை

1. மனுகுலம் காத்துத் தேற்றிட
மாதவசியாக வந்தருளுகின்ற
ஞானதேசிகனே அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறைவிலா சதுர்திகதி புகர்வாரம்
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 04 ம் நாள் 21.10.2022, வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு காசிபர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயர்வழி காட்டும் ஞானமே
ஞான உலகை படைக்குமென்பேன்
ஞானிகளை வணங்கும் பழக்கம் வர
4. வருகவே மக்களிடை நற்குணம்
வளர்ச்சிக்கான அறிவுத் தெளிவு
தரும சிந்தை யாவும் பெருகி
தரணியை நேசிக்கும் காக்கும்
5. காக்கும் உணர்வுகள் கூடி
கலியினை மாற்றி மக்களை
தாக்கா வண்ணம் பாதுகாப்பும்
தரும ஞான தயவு நிறைந்த நல்
6. நல்லதொரு ஞானயுகமாற்றமாக
ஞானிகள் எல்லாம் வெளிப்படும்படி
நல்ல வழிபாடும் நம்பிக்கை தரும்
ஞானிகள் பூசையும் வளர்த்து
7. வளர்த்து அரங்கன் நோக்கம்
வெற்றி அடைய வகை செய்வர்
தளர்வின்றி உயர் தொண்டாம்
தன்னார்வத் தொண்டாகச் செய்து
8. செய்துமே ஞானிகள் ஆட்சிதரும்
சிறப்பான ஞானசித்தர் காலம்
அய்யமற உருவாக்கி இனிதே
ஆறுமுகனார் மனமிரங்கி அருள
9. அருள உண்டான வழிபாட்டை
அளவிலா செய்து சிறப்பர்
அருளிடும் வேலவன் தலைமை
அகிலம் கண்டடையும் வண்ணம்

10. வண்ணமுடன் எங்கும் சேவை
வழிபாடாகத் தருமமாகக் கூட்டி
எண்ணமெல்லாம் நிரம்பி இருக்க
ஏழாம்படை வீட்டிலிருந்து சக்தி பெற்று

11. பெற்றுமே அற்புதம் படைத்து
பேருலகில் ஞான ஆட்சி தருவர்
ஆற்றல்பட உலகை படைப்பர்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–